**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 280/2019** |
| Deposition of witness | : | **PW-8** |
| Name | : | **துரைசாமி** |
| Father Name | : | **தங்கமுத்து** |
| Age | : | **37** |

**Accused absent.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11.03.2026.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

1. எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக ஊத்துக்குளி அரசு மருத்துவமனையில் இருந்து 08.07.2018 தேதியிலும், மேலும் அன்றைய தினமே பெருந்துறை அரசு மருத்துவமனையில் இருந்தும் இன்டிமேசன் பெறப்பட்டது. புகார்தாரர் திவ்யா திருப்பூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்தாரா என்றால் ஆமாம், உடன் அவரது கணவரும் இருந்தார். திவ்யா மேற்படி சிகிச்சையில் இருந்து எப்போது விடுவிக்கப்பட்டார் என்றால் தெரியவில்லை.

2. சம்பவத்தன்று வழக்கு கோப்பு எனது விசாரணைக்காக எனது பார்வைக்கு வைக்கப்பட்டது என்றால் சரிதான். 1 முதல் 5 பட்டியல் சாட்சிகள் எனக்கு சம்பவ இடத்தை அடையாளம் காட்டியதாக எனது விசாரணையின் போது குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது அன்றைய தினம் இரவு 8 மணி இருக்கும் அப்போது அந்த ஹோட்டல் திறந்து தான் இருந்தது.

3. நான் விசாரணைக்காக ஹோட்டலுக்கு சென்றபோது அந்த ஹோட்டல் சம்பந்தப்பட்ட யாரேனும் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை. அந்த இடத்தில் பொது மக்கள் சுமார் நான்கு பேர் இருந்திருப்பார்கள். நான் சொல்வது போல் நான் ஹோட்டலுக்கு செல்லவில்லை என்றாலும், நான் உண்மையில் அங்கு சென்றிருந்தால் ஹோட்டல் சம்பந்தப்பட்ட அதன் உரிமையாளரும் அல்லது அங்கு வேலை செய்யும் நபர்களோ அங்கு இருந்திருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. 4. காரைக்குடி மெஸ் கிழ மேல் பைபாஸ் சாலைக்கு வடபுற திசையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி காரைக்குடி மெஸுக்கு கிழபுற மற்றும் வடபுறம் 5 அடி இடைவெளி விட்டு கம்பி வேலை அமைக்கப்பட்டு இருந்தது என்றால் சரிதான்.

4. மேற்படி காரைக்குடி மெஸின் உரிமையாளர் யார் என்றும், அதில் வேலை செய்பவர்கள் யார் என்றும், அந்த மெஸ் இயங்கி வரும் கட்டிடத்தின் உரிமையாளர் யார் என்பதையும் எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் கட்டிடத்தின் உரிமையாளர் கண்ணு குட்டி என்ற நபரும், மெஸ்ஸின் உரிமையாளர் பழனிச்சாமி மற்றும் திவ்யா என்பதை தெரிந்து கொண்டேன், நான் விசாரித்த வரையில் அந்த மெஸில் வேறு யாரும் வேலை செய்யவில்லை.

5. அந்த மெஸ்க்கு பின்புறத்தில் வாடிக்கையாளர் பயன்பாட்டிற்காக ஒரு கழிவறை உள்ளது என்றால் சரிதான். மேற்படி கழிவறை இரும்பு கேட் கொண்டது என்றாலும், அதன் கூரைக்கும், கதவுக்கும் இடைவெளி எதுவும் இல்லை என்றாலும் சரிதான். எதிரி ஜமுனா ராணி முருக பவன் என்ற பெயரில் உணவகம் நடத்தி வந்தார் என்றால் சரிதான். மேற்படி முருக பவன் காரைக்குடி மெஸ்-க்கு பின்புறம் அமைந்துள்ளது என்றாலும்,

அதற்கு செல்ல வேண்டுமென்றால் காரைக்குடி மெஸ்-க்கு கிழக்கு திசையில் அமைந்துள்ள கம்பி வேலை ஓரமாக செல்ல வேண்டும் என்றாலும் சரிதான். நான் விசாரித்த வரையில் காரைக்குடி மெஸ்ஸில் இரவு யாரும் தங்குவதில்லை என்றால் சரிதான்.

6. காரைக்குடி மெஸ்-க்கு தனியாக கழிவுநீர் வசதி இல்லை என்றாலும் அதனால் அவர்களே குழி தோண்டி கழிவு நீரை அதில் விட்டு வருகிறார்கள் என்றால் குழி தோண்டி உள்ளார்கள் ஆனால் கழிவு நீர் விடப்பட்டதா என்ற விபரம் எனக்கு தெரியாது. சம்பவத்தில் சம்பந்தப்பட்ட பாத்ரூமின் நீளம், அகலம், உயரம் போன்ற விவரங்களை புகாரிலோ எனது விசாரணையிலோ யாரும் சொல்லவில்லை என்றால் சரிதான். நானும் அந்த விபரங்களை விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். சம்பவத்தன்று ஜமுனா ராணி கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த புகார் வாக்குமூலம், முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்றும் விபத்து பதிவேடு தற்போது என்னிடம் காட்டப்படுவதுதான் என்றால் சரிதான் **(மேற்படி ஆவணங்கள் முறையே எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.5 வரை குறியீடு செய்யப்படுகிறது).**

7. பாத்ரூம் மூன்று புறமும் சுவர் அமைந்துள்ளதாலும், கதவும் கூரை வரை உள்ளதாலும், பாத்ரூமில் சுற்றிலும் ஐந்து அடி இடைவெளியில் கம்பி வேலி அமைந்துள்ள காரணத்தினாலும், யாரும் பாத்ரூமுக்குள் எட்டிப் பார்க்க இயலாது என்று சொன்னால் சரிதான். ஏற்கனவே புகார்தாரருக்கும், எதிரிக்கும் இடையே கழிவுநீர் வெளியேற்றுவதில் பிரச்சனை ஏற்பட்டு, புகார்தாரர் எதிரியை தாக்கியதில் எதிரி கொடுத்த புகாரிலிருந்து தப்பிப்பதற்காக, புகார்தாரர் எதிரியின் மீது இந்த பொய்

புகாரை கொடுத்துள்ளார் என்றாலும், அதனை சரிவர விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

8. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் உடைந்த பீர்பாட்டிலின் அளவுகள் பற்றி கைப்பற்றுதல் மகஜரில் சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பீர் பாட்டில் மற்றும் மட்டை சம்பவ இடத்திலிருந்து சுமார் 8 முதல் 10 அடி தள்ளி இருந்து கைப்பற்றியதாக சொல்லும் நிலையில், புகார்தாரரின் விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்களுக்கு முரண்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் கைப்பற்றுதல் சமயத்தில் காரைக்குடி மெஸ் பூட்டி இருந்தது என்று கூறியுள்ள காரணத்தினால், நான் அன்றைய தினம் அங்கு சென்று எந்த ஒரு பொருளையும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் சாட்சிகளை விசாரித்து ஆவணங்கள் தயார் செய்யவில்லை என்றால் சரியில்லை. எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியில்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரி அல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.03.11 15:02:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.